# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை
## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 07 - நேரம்:30 நிமிடம்
## விடைப்பத்திரம் : மாரி போல

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** அறு குளத்து உகுத்தும், அகல் வயல் பொழிந்தும்,
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்,
வரையா மரபின் மாரி போலக்,
கடாஅ யானைக் கழல் கால் பேகன்
கொடை மடம் படுதல் அல்லது,
படை மடம் படான், பிறர் படை மயக்குறினே.

<u>வினாத்தொகுதி:01</u>

**(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.**

- **பாடல் இடம் பெற்ற திணை : புறத்திணை:**பாடாண் திணை (பாடப்படும் ஆண்மகனது ஒழுக்கம்) மன்னர்களின் வெற்றி,வலிமை,அணி,புகழ்,கொடைத்திறன்,வீரச்சிறப்பு முதலியவற்றைப் பாடுதல்.

- **துறை :**இயன்மொழி வாழ்த்து (அரசனது தன்மையினைப் புகழ்ந்து சொல்லும் புறத்துறையே இயன்மொழிவாழ்த்து ஆகும். இந்த அரசன் இவ்வாறு கொடுத்தான். அவர் போல மற்றவரும் கொடுத்தல் வேண்டும் என்று பிறர் அறியக் கூறுவதும் ஆகும். கொடைமடம் படுதல் அல்லது,படை மடம் படான் எனஅரசனது இயல்பு மிகுதி தோன்றக் கூறுவது.

**(04 புள்ளிகள்)**

**(ii)** இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.

- அறுகுளம் - நீர் அற்ற குளம்
- கடாஅ யானை - மதம் பிடித்த யானை
- வரையா - வரையறுக்கப்படாத
- மயக்குதல் - கலத்தல்

**(04 புள்ளிகள்)**

**(iii)** இப்பாடலில் வெளிப்படம் **பேகமன்னனின் குணவியல்புகளை எடுத்தக்காட்டுக.**

- கொடை வழங்கும்போது வேறுபாடுகாட்டாது,மழைபோல வரையாது வழங்கும் இயல்புடையவன்.
- போர்க்களத்தில் வீரமில்லாதவர், புறமுதுகிட்டார், காயமடைந்தோர் மூத்தோர்,இளையோர், முதலியோர்மீது போர்செய்ய விரும்பாமையும்,எதிர்நின்று போராடும் போர் வீரருடன் மட்டும் போர் செய்யவிரும்புபவன்.
- மதங்கொண்ட யானையை உடயவனாக,வீரக்கழலை அணிந்தவன்.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:02</u>

**(i) இப்பாடல் பாடப்பட்ட பின்னணியை குறிப்பிடுக.**

- வையாவிக் கோப்பெரும் பேகன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். ஆவனிடத்து மிகுந்த ஈடுபாடுடைய புலவர் பரணர் அவனுடைய கொடைத் தன்மையையும் போர்த் தன்மையையும் இந்தப் பாடலில் புகழ்கின்றார்.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் யாவை? விளக்குக.**

- பேகன் கொடைமடம் படுவானாயினும் படைமடம் படமாட்டான் என்பதையே செய்யுளின் முதன்மைக்கருத்தாக முன்வைக்கப்பட்டுள்ளது. எனவே இதனூடாக பேகனது கொடைநலச்சிறப்பையும் வீரச்சிறப்பையும் வியந்து வெளிப்படுத்தியுள்ளார்.

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விழைந்த விடயங்கள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.?**

- விளை நிலத்தில் மட்டுமன்றிக் களர்(உவர்) நிலத்திலும் பொழியும் மழையை உவமையாக்கி அனைவருக்கும் கொடுக்கும் அவன் கொடைச்சிறப்பைக் கூறுதல்.
- கோடை மடம் படுதல் என்ற தொடர் மூலம் பழிப்பது போலப் புகழ்தல் (பொதுவாக மடம்படுதல் இகழ்ச்சிக்குரியது. ஆனால் கொடை விடயத்தில் அது புகழ்ச்சிக்குரியதாகிறது)
- அரசனது வரையாது வழங்கும் கொடைத்தன்மையின் மிகுதியை எடுத்துக்காட்டுவதன் மூலமாக.<u>மடம்படுதல்</u> : 'அறியாமைப்படுதல்' என்பதாகும்.இது இப்பாடலில் இருவகைகளில் வருகிறது.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:03</u>

**(i) இப்பாடலில் கொடைமடம்படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?**

- கொடைமடம்படுதலாவது,கொடையின்போது அறியாமைப்படுதலாகும்.பரிசில் பெற வருவோரை வேண்டப்படுவார், வேண்டப்படாதவர், வலியோர், மெலியோர், புதியோர், பழையோர், என்ற வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் கொடையளிப்பதன் இயல்புடைமையே கொடைமடம்படுதல் ஆகும்.
- மழையானது நீர் இல்லாத குளத்தில் பொழியவேண்டும்.வயலில் பொழியவேண்டும். அவ்வாறன்றி களர் நிலத்திலும் பொழிவது போல வள்ளல் பேகன் கோடை வழங்குவதில் ஒரு மடையனாக விளங்குபவன். ஆனால் போரின்போது மடமை இல்லாதவன். நல்லவர்களை விலக்கி அல்லாதவர்களைக் கொல்பவன்.

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடப்பட்ட பேகன் மன்னனின் கொடைச்சிறப்பு இப்பாடலில் எவ்வாறு துலக்கம் பெறுகின்றது?**

- சங்க இலக்கியம் குறிப்பிடும் கடையெழுவள்ளல்களில் புகழ்பெற்ற ஒருவனாகிய வையாவிக்கோப் பெரும் பேகன் மிகுந்த கொடையாளி.
- மயிலுக்குப் போர்வை கொடுத்தவன் கபிலர், பரணர், வன் பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய புலவர்கள் இம்மன்னனைப் பாடியுள்ளனர்.
- அன்புள்ளத்தோடு பொருட்களை வாரி வழங்கும்போது,இவருக்க கொடுக்கவேண்டும்,இவருக்கக் கொடுக்கக்கூடாது என்ற வரையறை இல்லாமல் கேடபவர் எல்லோருக்கும் வாரிக் கொடுத்தவன்.

- அவனது கொடைச்சிறப்பினைப்புகழ மழைக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.மழை பெய்யும்போது,பயன்படும் குளத்திலும் பொழிகிறது,வயலிலும் பொழிகிறது,ஒருவகையிலும் பயன்படாத உவர் நிலத்திலும் பெய்கின்றது.அந்த மழைக்குள்ள அறியாமை பேகனிடத்திலும் இருந்ததது என்கிறார் பரணர்.
- இரக்க நெஞ்சத்தால் தக்கவர் தகாதவர் என்றபாகுபாடு இல்லாமல் பொருளுதவி செய்தபோதிலும் வீரநெஞ்சத்தால் போர்க்களம் புகுந்து எதிரிகளின் படைகளோடு போர் செய்யும்போது அந்த அறியாமையை பேகனிடம் காணமுடியாது.
- போர்களத்தில் இன்னாரை தாக்கவேண்டும் இன்னாரை தாக்கக்கூடாது என்ன தெளிவுடன் போர் செய்யும் சிறந்த வீரன்.ஆகவே பேகனிடம் கொடைமடம் உண்டே தவிர படைமடம் இல்லை என்பதினூடாக கொடைச்சிறப்பக் கூறப்பட்டது.

**(04 புள்ளிகள்)**

**(iii) பாடலில் கையாளப்பட்ட உவமை அணியின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.**

- வரையா மரபின் மாரி போலக் கடாஅ யானைக் கழல் கால் பேகன்:பேகனின் கொடைமடத்திற்கு மாரிமழையை உவமித்துள்ளார்.
- உவமானம்: ஒரே தன்மையினதாகப் பெய்யும் மாரிமழை,உவமேயம்: எத்தகுதியினராயினும் ஒரேதன்மையில் கொடை வழங்கல்,பொதுத்தன்மை:தகுதிபார்க்காது சகலருக்கும் வழங்கும் இயல்பு.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:04</u>

**(i) இப்பாடலில் படை மடம் படுதல் என்பதனால் கருதப்படுவது யாது?**

- படை மடம் படுதலாவது,போர் புரியும்போது அறியாமைப்படுதலாகும். வீரமில்லாதவர், புறமுதுகிட்டார், காயமடைந்தோர் மூத்தோர்,இளையோர், முதலியோர்மீது போர்செய்ய விரும்பாமையும்,எதிர்நின்று போராடும் போர வீரருடன் மட்டும் போர் செய்வதுமாகும்.

**(04 புள்ளிகள்)**

**(ii) "வரையா மரபின் மாரி போலக்...பேகன்" எனும் தொடர் ஊடாக வெளிப்படுத்தப்படும் செய்தியைக் குறிப்பிடுக.**

- மழையானது நீர் இல்லாத குளத்தில் பொழியவேண்டும்.வயலில் பொழியவேண்டும். அவ்வாறன்றி விளை நிலத்தில் மட்டுமன்றிக் களர்(உவர்) நிலத்திலும் பொழியும் மழையை உவமையாக்கி அனைவருக்கும் கொடுக்கும் வள்ளல் பேகனின் கொடைச்சிறப்பைக் குறிப்பிட்டுள்ளார்.
- அவனது கொடைச்சிறப்பினைப் புகழ மழைக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார்.மழை பெய்யும்போது,பயன்படும் குளத்திலும் பொழிகிறது,வயலிலும் பொழிகிறது,ஒருவகையிலும் பயன்படாத உவர் நிலத்திலும் பெய்கின்றது. அந்த மழைக்குள்ள அறியாமை பேகனிடத்திலும் இருந்ததது என்கிறார் பரணர்.

**(04 புள்ளிகள்)**

**(iii) பாடல் வெளிப்படுத்தும் புறத்திணைப் பண்புகளைக் குறிப்பிடுக.**

* பாடாண் திணையில் புலவர் கூற்றில் அமைந்துள்ளது. மன்னர்களின்வெற்றி,வலிமை, அணி,புகழ்,கொடைத்திறன், வீரச்சிறப்பு முதலியவற்றைப் பாடுதல்.
* பேகனது கொடை நலச்சிறப்பையும் வீரச்சிறப்பையும் வியந்து பெயர்சுட்டி வெளிப்படுத்தியுள்ளார்.
* இயன் மொழித்துறை:கொடைமடம் படுதல் அல்லது,படை மடம் படான் எனஅரசனது இயல்பு மிகுதி தோன்றக் கூறுவது.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**